www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# 11 - STD முதல் திருப்புதல் தேர்வு - 2023

## கணக்குப்பதிவியல்

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 90

**I. சரியான விடையை தேர்வு செய்க.** **20 x 1 = 20**

1. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது?
அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்பு நிலைக்குறிப்பு ஈ) பேரேடு

2. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதன்அடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு
அ) முக்கியத்துவ மரபு ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து
இ) முன்னெச்சரிக்கை மரபு ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

3. சொந்த பயன்பாட்டிற்காக உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படடும் தொகையால் ஏற்படும் நிலை.
அ) சொத்தின் மதிப்பு குறையும், உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்
ஆ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், மற்றொரு சொத்தின் மதிப்பு குறையும்
இ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், பொறுப்புகளின் மதிப்பு உயரும்
ஈ) சொத்தின் மதிப்பு உயரும், முதலின் மதிப்பு குறையும்

4. முன் கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு
அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு
இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

5. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டுவரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
அ) ரொக்க கணக்கு ஆ) எடுப்புக் கணக்கு இ) முதல் கணக்கு ஈ) அனாமத்து கணக்கு

6. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
அ) ஆண்டு இருதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

7. ஒரு குறிப்பிட்ட கலா கொள்முதல் ஏட்டின் மொத்தம், எடுத்தெழுதப்படுவது
அ) கொள்முதல் கணக்கின் பற்றுப்பக்கம் ஆ) விற்பனை கணக்கின் பற்றுப்பக்கம்
இ) கொள்முதல் கணக்கின் வரவுப்பக்கம் ஈ) விற்பனை கணக்கின் வரவுப்பக்கம்

8. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்
அ) ரொக்க ஏடு ஆ) பேரேடு இ) உரிய குறிப்பேடு ஈ) கொள்முதல் ஏடு

9. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால் அது?
அ) எதிர்ப்பதிவு ஆ) கூட்டுப்பதிவு இ) ஒற்றைப்பதிவு ஈ) சாதாரணப்பதிவு

10. வங்கி அறிக்கையின்படி இருப்பு ₹ 1000 செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ₹2000 ரொக்க ஏட்டில் வங்கிப்பத்தியின் இருப்பு எவ்வளவு?
அ) ₹ 3000 மேல் வரைப்பற்று ஆ) ₹ 3000 சாதகமான இருப்பு
இ) ₹ 1000 மேல் வரைப்பற்று ஈ) ₹ 1000 சாதகமான இருப்பு

11. ஒரு நடவடிக்கை முழுவதுமே பதிவு செய்யப்படாத போது அது _____ எனப்படும்.
அ) விதிப்பிழை ஆ) முழுவிடு பிழை இ) பகுதி விடு பிழை ஈ) இருமுறை பிழை

12. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) அ,ஆ மற்றும் இ

13. சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் _____ அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.
அ) ஆரம்பத்தில் ஆ) இறுதியல் இ) மத்தியல் ஈ) இவைகளில் ஏதுமில்லை

14. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ₹ 20,000



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

அ) தொடக்கச் செலவு ஆ) வருவாயினச் செலவு
இ) முதலினச் செலவு ஈ) நீள்பயன வருவாயினச் செலவு

15. இறுப்புக் நிலைக் குறிப்பு என்பது ______
அ) ஓர் கணக்கு ஆ) ஓர் அறிக்கை
இ) ஓர் அறிக்கையுமில்லை, ஓர் கணக்குமில்லை ஈ) மேல் கூறியவற்றில் ஏதுமில்லை

16. வங்கி மேல்வரைப் பற்று எதில் காண்பிக்கப்படும்?
அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாப நட்டக் கணக்கில்
இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

17. நிகர இலாபம்
அ) முதல் கணக்கில் பற்று வைக்கப்படும் ஆ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்
இ) எடுப்புகள் கணக்கில் பற்று வைக்கப்படும் ஈ) எடுப்புகள் கணக்கில் வரவு வைக்கப்படும்

18. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது
அ) அடக்க விலையில் ஆ) சந்தை விலையில்
இ) அடக்க விலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்
ஈ) அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

19. வெளியிட்டு சாதனத்திற்கான ஒரு உதாரணம்
அ) சுட்டி ஆ) அச்சுப்பொறி இ) ஒளியியல் வருடி ஈ) விசைப்பலகை

20. இந்திய கூட்டு பங்கு நிறுமச் சட்டம் 2013 பிரிவு 128 (1) ன் படி நிறுமங்கள் அனைத்தும் எதன் அடிப்படையில் கணக்கேடுகளில் நடவடிக்கைகளைப் பதிவு செய்வது அவசியமாகிறது?
அ) ரொக்க அடிப்படை ஆ) நிகழ்வு / வணிக அடிப்படை
இ) கலப்பு அல்லது கலப்பின அடிப்படை ஈ) மேற்கூறிய அனைத்தும்

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண்.30 கட்டாய வினா) 7 x 2 = 14**

21. கணக்கியலை வரையறு?
22. துணை ஏடுகளின் வகைகளை எழுதுக?
23. வியாபாரத் தள்ளுபடி என்றால் என்ன?
24. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக?

| | | | | |
|---|---|---|---|---|
| அ) சொத்துக்கள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| ₹ 1,00,000 | = | ₹ 80,000 | + | ? |
| ஆ) சொத்துக்கள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| ? | = | ₹ 1,60,000 | + | ₹ 80,000 |

25. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கு விளக்கக்குறிப்பு தருக.

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விபரம் | பே.ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 1 | ரொக்கக் க/கு ப<br>ஷியாம் முதல் க/கு | | 3,00,000 | 3,00,000 |
| 2 | வங்கி க/கு ப<br>ரொக்கம் க/கு | | 2,70,000 | 2,70,000 |

26. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கை தயாரிக்கவும்.

| 2016 ஜன | | ₹ |
|---|---|---|
| 1 | கையில் உள்ள அறைகலன் | 2,000 |
| 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |
| 30 | அறைகலன் விற்றது | 400 |

27. கீழ்காணும் சரிக்கட்டுதல்களுக்கு தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தரவும்.



CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

அ) கொடுபட வேண்டிய சம்பளம் ₹ 150
ஆ) காப்பீடு முன்கூட்டிச் செலுத்தியது ₹ 450

28. பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.
அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது
ஆ) கடனுக்கு சரக்கு விற்றது
இ) கடனுக்கு சரக்கு வாங்கியது
ஈ) கடனுக்கு சொத்துகள் வாங்கியது

29. இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
அ) விற்பனை ஏட்டின் மொத்தத் தொகையில் ₹100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது
ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தத்தில் ₹200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது

30. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்ற பொருளின் அடக்க விலையைக் கணக்கிடுக.

| | | | |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | - ₹ 8,000, | கொள்முதல் | - ₹ 60,000 |
| நேரடி செலவுகள் | - ₹ 5,000 | மறைமுகச் செலவுகள் | - ₹ 6,000 |
| இறுதி சரக்கிருப்பு | - ₹ 9,000 | | |

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண்.40 கட்டாய வினா) 7 x 3 = 21**

31. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

32. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

33. வாகன உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் சசிகுமாரின் ஏடுகளில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டு பதிவு தருக

2017 அக்டோபர்

| | | |
|---|---|---|
| 1 | வியாபாரம் தொடங்குவதற்காக இட்ட சரக்கின் மதிப்பு | - ₹ 40,000 |
| 2 | வணிகத்தில் இட்ட ரொக்கத்தின் மதிப்பு | - ₹ 60,000 |
| 4 | அருளிடமிருந்து கடனுக்கு வாங்கிய சரக்கின் மதிப்பு | - ₹ 70,000 |
| 6 | அருளிற்கு திருப்பிய சரக்கின் மதிப்பு | - ₹ 10,000 |
| 10 | அருளின் கணக்கில் செலுத்திய தொகை | - ₹ 60,000 |
| 15 | கந்தனுக்கு கடனுக்கு விற்ற சரக்கின் மதிப்பு | - ₹ 30,000 |

34. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| வங்கிக்கடன் | 2,00,000 | கொள்முதல் | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | விற்பனை | 3,00,000 |
| சரக்கிருப்பு | 70,000 | கடனாளிகள் | 4,00,000 |
| முதல் | 2,50,000 | வங்கி | 2,00,000 |

35. தவனை நாளை கண்டறிக.

| மாற்றுச்சீட்டு நாள் | தவணைக் காலம் | செலுத்துதற்குரிய நாள் |
|---|---|---|
| மார்ச் 1 | 2 மாதங்கள் | ? |
| ஜீலை 12 | 1 மாதம் | ? |
| ஏப்ரல் 2 | 2 மாதங்கள் | ? |

36. பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிபத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

2017 ஜனவரி

| | | | ₹ |
|---|---|---|---|
| 1 | கை இருப்பு ரொக்கம் | - | 11,200 |
| 5 | இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது | - | 300 |
| 7 | வாடகை செலுத்தியது | - | 30 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது | - | 300 |
| 10 | மோகனுக்கு செலுத்தியது | - | 700 |
| 27 | அறைகலன் ரொக்கதிற்கு வாங்கியது | - | 200 |
| 31 | சம்பளம் கொடுத்தது | - | 100 |

37. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31- ம் நாளுக்குரிய வங்கி



CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

சரிக்கட்டும் பட்டியலை தயார் செய்க.

அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு - ₹ 7,130

ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது - ₹ 1000

இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது - ₹ 800

38. பின்வரும் நடவடிக்கைகளை இராம் வீட்டு உபயோகப் பொருள் நிறுவனதின் ஜீலை 2017 க்கான கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

2017

| | |
|---|---|
| ஜீலை 5 | கண்ணன் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது |
| | 50 மின் சலவைப் பெட்டிகள் ஒன்று ₹ 500 வீதம் |
| | 10 மாவரைக்கும் இயந்திரங்கள் ஒன்று ₹ 3,000 வீதம் |
| ஜீலை 6 | சிவா நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது |
| | 25 மின் விசிறிகள் ஒன்று ₹ 1,250 வீதம் |
| ஜீலை 10 | பாலன் விற்பனையகத்திடம் கடனுக்கு வாங்கியது |
| | 20 மாவரைக்கும் இயந்திரம் ஒன்று ₹ 2,500 வீதம் |
| | 10 மின்னம்மிகள் ஒன்று ₹ 3,000 வீதம் |
| | வியாபாரத் தள்ளுபடி 10 % |
| | அனுப்புகை செலவுகள் ₹ 1,000 |
| ஜீலை 20 | குமாரிடமிருந்து கடனுக்கு வாங்கிய ஒரு நகல் எடுக்கும் இயந்திரம் ₹ 35,000 |

39. ஒரு நிறுவனம் 1.1.2017 அன்று ₹ 1,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. இயந்திரத்தின் எதிர் நோக்கும் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள், மற்றும் இறுதி மதிப்பு ₹ 10,000 ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அதன் தேய்மானத் தொகையை நேர்கோட்டு முறையில் கணக்கிடவும்.

40. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்பனைத் தொகையைக் காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 20,000 |
| நிகர கொள்முதல் | 70,000 |
| நேரடிச் செலவுகள் | 10,000 |
| இறுதி சரக்கிருப்பு | 30,000 |
| மொத்த இலாப விகிதம் (விற்பனையில்) | 20 % |

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7 x 5 = 35**

41. (அ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டு விளைவுகளை பதிவிட்டு காட்டுக.

அ. இராஜ் ₹ 40,000 ரொக்கத்துடன் வணிகத்தைத் தொடங்கினார்.

ஆ. ₹ 30,000 வைப்புத் தொகையுடன் வங்கியில் கணக்கை ஆரம்பித்தார்

இ. ஹரி என்பவரிடமிருந்து ₹ 12,000 க்கு கடனுக்கு சரக்கு வாங்கப்பட்டது

ஈ. இராஜ் தமது சொந்த பயன்பாட்டிற்காக ₹ 1,000 எடுத்துக்கொண்டார்

உ. பற்று அட்டையினைப் பயன்படுத்தி ₹ 10,000 க்கு அறைகலன் வாங்கப்பட்டது

ஊ. முருகன் என்பவருக்கு சரக்கு விற்பனை செய்யப்பட்டு ₹ 6,000 பெறப்பட்டது

எ. அலுவலகத் தேவைக்காக வங்கியிலிருந்து பணம் எடுக்கப்பட்டது ₹ 1,000

(அல்லது)

(ஆ) சந்திரன் விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் விறுவனம் நடத்தி வருகிறார். அவருடைய 2018 மார்ச் மாத நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| மார்ச் | | ₹ |
|---|---|---|
| 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 4,00,000 |
| 2 | வங்கியில் ரொக்கம் எசலுத்தியது | 3,00,000 |
| 3 | இரவியிடமிருந்து சரக்குகள் கொள்முதல் செய்யப்பட்டு இணைய வங்கிமூலம் செலுத்தப்பட்டது | 90,000 |
| 4 | குமாருக்கு விற்பனை செய்யப்பட்டது அத்தொகையை அவர் பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்தினார் | 10,000 |



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

| | | |
|---|---|---|
| 5 | விவேக்கிற்கு விற்வைனைச் செய்ததற்கான தொகையினை அவர் எடுப்பு அட்டை மூலம் செலுத்தினார் | 60,000 |
| 6 | கீர்த்தனாவிற்கு சரக்குகள் விற்றத் தொகை கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டது | 50,000 |
| 7 | பங்காதாயம் நேரடியாக வங்கியல் பெறப்பட்டது | 2,000 |
| 8 | தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் ரொக்கம் எடுத்தது | 3,000 |
| 9 | சம்பளம் மின்னனு பரிவர்த்தனை மூலம் வழங்கப்பட்டது | 6,000 |
| 10 | அறக்கட்டளைக்கு கிரிக்கெட் மட்டைகள் நன்கொடையாக வழக்கியது | 10,000 |

42. அ) 2017 ஏபரல் 1 அன்று குமரன் என்பவரது ஏடுகளில் பின்வரும் இருப்புகள் இருந்தன

சொத்துக்கள் : ரொக்கம் ₹ 1,00,000 : சரக்கிருப்பு ₹ 40,000

ரோஹித் என்பவரிடமிருந்து தொகை பெற வேண்டியது ₹ 10,000

அறைகலன் ₹ 10,000

பொறுப்புகள் : அனுஷ் என்பவருக்கு செலுத்த வேண்டிய தொகை ₹ 40,000 ; குமரன் முதல் தொகையை கண்டறிந்து, கொடுக்கப்பட்டுள்ள தொடக்கப்பதிவுகளை பேரேட்டில் எடுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) நேர்கோட்டு முறை தேய்மான விகிதத்திற்கும் குறைந்து செல் மதிப்பு முறை தேய்மான விகிதத்திற்கும இடைய உள்ள வேறுபாட்டை எழுதவும்.

43. அ) கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா, அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமானா எனக் காட்டிடுக.

(i) வெளித்தூக்குக் கூலி (ii) உள்தூக்குக் கூலி (iii) விற்பனை (iv) கொள்முதல் (v) வாராக்கடன் (vi) வட்டிச் செலுத்தியது (vii) வட்டி பெற்றது (viii) தள்ளுபடி பெற்றது (ix) முதல் (x) எடுப்புகள்

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மகேஷின் உள் திருப்ப ஏட்டில் பதிவு செய்க. பேரேட்டில் எடுதுக.

2017

| | |
|---|---|
| ஏப்ரல் 6 | தரம் குறைவு என சங்கர் ஒரு சட்டை ₹ 150 வீதம் 30 சட்டைகளை திருப்பி அனுப்பினார் |
| ஏப்ரல் 8 | ஆணைப்படி இல்லாததால் அமர் தைலகம், ஒரு பனியன் ₹ 100 வீதம் 10 பனியன்களை திருப்பி அனுப்பியது |
| ஏப்ரல் 21 | ஆணையின் படி இல்லையென பிரோமா துணியகம், ஒன்று ₹ 200 வீதம், 12 சுடிதார்களை திருப்பி அனுப்பியது. |

44. அ) கல்யான சுந்தரம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டின் கீழ்கண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| 2017 | | ₹ |
|---|---|---|
| ஜனவரி 1 | ரொக்க இருப்பு | 42,000 |
| | வங்கி இருப்பு | 35,000 |
| 3 | ரொக்க விற்பனை மூலம் பெற்ற தொகை | 15,000 |
| 4 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 11,500 |
| 6 | ரொக்கம் கொள்முதல் | 14,300 |
| 9 | மின்னனு தீர்வை முறையில் வங்கி நேரடியாக பங்காதாயம் பெற்றது | 2,000 |
| 10 | பொங்கல் முன்பணம் பணியாளர்களுக்கு வங்கி மூலம் செலுத்தியது | 17,000 |
| 12 | நாகராஜனிடமிருந்து ரொக்கம் பெற்றது | 11,850 |
| | அவருக்கு அளித்த தள்ளுபடி | 150 |
| 17 | மகேஷிக்கு கொடுக்க வேண்டிய ₹ 20,000 -த்தில் ₹ 19,700 செலுத்தி அவர் கணக்கு தீர்க்கப்பட்டது | |
| 20 | சொந்த செலவுகளுக்காகப் பணம் | |



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

| | | |
|---|---|---|
| | எடுத்துக்கொண்டது | 20,000 |
| 30 | தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தின் மூலம் அலுவலக செலவுகளுக்காகப் பணம் எடுத்தது | 1,500 |

ஆ) கீழ்க்கணட தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31, ஆம் நாளன்றைய வங்கி சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின் படியான இருப்பை கண்டறியவும்

| விபரம் | ₹ |
|---|---|
| i) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படடது | 500 |
| ii) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இருவரை முன்னிலைப்படுத்தப்பட்டது | 1,000 |
| iii) வங்கியில் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி | 100 |
| iv) நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய வாடகை | 200 |
| v) ரொக்க ஏட்டின் படி இருப்பு | 300 |

45. அ) நேர்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் காண்க. மேலும் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31 ல் முடிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஜனவரி 1, 2016 இந்திரம் வாங்கியதற்காக செலுத்தியது | ₹ 1,40,000 |
| ஜனவரி 1, 2016 இயந்திரம் கொண்டு வருவதற்கு போக்குவரத்து செலவு | ₹ 1,000 |
| ஜனவரி 1, 2016 நிறுவுகைச் செலவுகள | ₹ 9,000 |
| இறுதி மதிப்பு | ₹ 45,000 |
| எதிர் நோக்கில் பயனலிப்பு காலம் | 7 ஆண்டுகள் |

(அல்லது)

ஆ) பின்வருபவை முதலின, வருவாயின, இனங்களா என்பதை கூறுக.

i) ஏற்கனவே எள்ள கட்டடத்தோடு கூடுதலாகக் கட்டியது ₹ 5,000

ii) பழைய மகிழுந்து வாங்கியது ₹ 30,000 மேலும் அதனை உடனடியாக பழுது பார்த்ததற்கானச் செலவு ₹ 2,000

iii) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கானச் செலவு ₹ 10,000

iv) புதிய இயந்திரம் மீதான ஏற்றிச்செல் செலவு, வண்டிக் கட்டணம் ₹ 150 நிறுவகைச் செலவுகள் ₹ 200

v) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்த செலவு ₹ 150

46. அ) கணேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து, வியாபார இலாப நட்ட கணக்கு தாயரிக்கவும்.

| விபரம் | ₹ | விபரம் | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (1.1.2017) | 8,000 | வாராக்கடன் | 1200 |
| கொள்முதல் | 22,000 | வியாபாரச் செலவுகள் | 1,200 |
| விற்பனை | 42,000 | அளித்த தள்ளுபடி | 600 |
| கொள்முதல் மீதான செலவுகள் | 2,500 | கழிவு கொடுத்தது | 1,100 |
| நிதிசார் செலவுகள் செய்தது | 3,500 | விற்பனைச் செலவுகள் | 600 |
| விற்பனை மீதான செலவுகள் | 1,000 | அலுவலக வாகனங்கள் மீதான பழுதுபார்ப்பு செலவுகள் | 600 |

2017 டிசம்பர் 31 ம் அன்றைய இறுதிச் சரக்கிருப்பு ₹ 4,500

(அல்லது)

ஆ) 2017, டிசம்பர் 31ம் நாளன்று, கீழ்கண்ட சரிகட்டுதல்களுக்கு தேவையான சரிகட்டுப் பதிவுகள் தருக

i) கொடுபட வேண்டிய சம்பளம் ₹ 1,200

ii) கொடுபட வேண்டிய வாடகை ₹ 300

iii) முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு முனைமம் ₹ 450

iv) முதலீடுகள் மீதான கூடியுள்ள வட்டி ₹ 400



CamScanner

V) போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ₹ 200

47. அ) சிவா என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து வியாபார, இலாப நட்டக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| விபரம் | ₹ | விபரம் | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (1.1.2016) | 9,000 | வாராக்கடன் | 1,200 |
| கொள்முதல் | 22,000 | இதரச் செலவுகள் | 1,800 |
| விற்பனை | 42,000 | அளித்த தள்ளுபடி | 1,700 |
| கொள்முதல் மீதான செலவுகள் | 1,500 | விற்பனை மீதான செலவுகள் | 1,000 |
| வங்கி கட்டணம் செலுத்தியது | 3,500 | அலுவலக அறைகலன் மீதான பழுதுபார்ப்பு செலவுகள் | 600 |

சரிகட்டுதல்கள்

அ) 31.12.2016 அன்றைய இறுதிச் சரக்கிருப்பு ₹ 4,500

ஆ) மேலாளர் அவருக்குரிய கழிவுக்கு பின் உள்ள நிகர இலாபத்தில் 5 % கழிவு பெறுகிறார்

(அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கை தயாரிக்கவும்

2017 ஜீலை

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆனந்த் கணக்கின் வரவு இருப்பு | - | 4,000 |
| 15 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | - | 2,000 |
| 18 | ஆனந்திடமிருந்து கடனாகக் கொள்முதல் செய்தது | - | 8,000 |
| 20 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | - | 3,960 |
| | அவர் அளித்த தள்ளுபடி | - | 40 |
| 25 | ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | - | 5,000 |



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com